கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி ஜெ.வீரமணி ஜெயக்குமார் தலைமையில் மாணவரணி நிர்வாகிகள் சந்தித்து தமிழ்நாடு முழுவதும் கழக மாணவர் அணி சார்பில் தடையை மீறி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை விளக்கிக் கூறி வாழ்த்துப் பெற்றனர்.

த.வெ.க. அரசில் சட்டம் - ஒழுங்கு படும் பாடு!

தமிழ்நாட்டில் ஒரே நாளில் 12 பேர் கொலை!

நாள்தோறும் குற்றச் சம்பவங்கள் அதிகரிப்பு!

சென்னை, ஜூலை 1 -

தமிழ்நாட்டில் ஒரே நாளில் 12 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 'இது என்ன உத்தரபிரதேசமா?' என மக்கள் கொந்தளித்துள்ளனர்.

இது பற்றிய விவரம் வருமாறு :-

கன்னியாகுமரியில் மாவட்டத்தில் நேற்று முன் தினம் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கண்ணம்பிவிளையில் மது அருந்தும் போது சிங்கம், லிங்கசாமி கொடூரமாக கொல்லப்பட்டார். நாகர்கோவில் அருகே கட்டுமான ஒப்பந்ததாரர் தங்கபாண்டி தலையில் கல்லை போட்டு தொழிலாளர் சரவணக்குமார் கொலை செய்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே 9 வயது சிறுவன் கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஓரினச்சேர்க்கைக்கு இணங்க மறுத்த சிறுவனை கொலை செய்த 12ம் வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டார்.

தலைநகர் சென்னையில் மேடவாக்கம் அருகே ஆட்டோ ஓட்டுநர் சுரேஷ், அவரது ஆட்டோவிலேயே மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தார். செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் அருகே ஓடிசாவை சேர்ந்த இளைஞர் முஸ்தாக்ஐ வீடு புகுந்து, அடையாளம் தெரியாத கும்பல் கொலை செய்துள்ளது. காரைக்குடி புது பேருந்து நிலையத்தில் மணிகண்டன் என்ற இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டம், சோழவந்தானில் சித்திக் என்ற இளைஞரை, அடையாளம் தெரியாத கும்பல் வழிமறித்து படுகொலை செய்தது. ஏற்கனவே கொலை வழக்கில் சிக்கிய சித்திக்கை பழிவாங்கும் விதமாக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலையில் நிலத்தகராறில் துலுக்கானத்தை, அவரது அண்ணன் மகன் மற்றும் அவரது உறவினர்கள் தாக்கி கொலை செய்துள்ளனர். கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே குடும்ப தகராறில் தந்தை ராமசாமியை, மகனே அடித்து கொன்றுள்ளார். பழனி அருகே குடும்பப் பிரச்சினை காரணமாக தங்கையின் கணவர் துர்கைராஜை, மைத்துனரே தலையில் கல்லைப் போட்டு கொலை செய்துள்ளார்.

கிருஷ்ணகிரி அருகே மல்லிகைபாய் தொட்டி கிராமத்தில் குடும்பத் தகராறில் மனைவி சுஷ்மிதாவை கணவரே கொலை செய்துள்ளார். இதன் மூலம் ஒரே நாளில் மட்டும் 12 படுகொலைகள் தமிழ்நாடு முழுவதும் அரங்கேறியுள்ளன.

விவசாயக் கடன் தள்ளுபடி விவகாரம்:

த.வெ.க. அரசைக் கண்டித்து விவசாயிகள் உண்ணாவிரதம்!

சென்னையில் திரண்டனர்!

சென்னை, ஜூலை 1 -

விவசாயக் கடன் தள்ளுபடி விவகாரத்தில் மோசடி செய்த த.வெ.க. அரசைக் கண்டித்து சென்னையில் விவசாயிகள் திரண்டு வந்து உண்ணாவிரத போராட்டம் பாடை கட்டி, சடலமாக படுத்து, ஒப்பாரி வைத்து நூதன போராட்டம் நடத்தி மோசடி செய்த த.வெ.க. அரசை கண்டித்து விவசாயிகள் கண்டன முழக்கமிட்டனர்.

த.வெ.க. தேர்தல் அறிக்கையில் கூறியபடி சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதமும், பெரு விவசாயிகளுக்கு 50 சதவிகிதமும் நிலத்தின் அடிப்படையில் வேளாண் கடனை தள்ளுபடி செய்திட வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், விவசாய கடன் தள்ளுபடி விவகாரத்தில் த.வெ.க. அரசு மோசடி செய்துள்ளதாகவிவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனை கண்டித்தும், நெல் குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் விலை நிர்ணயம் செய்து, செப்டம்பர் 1 முதல் கொள்முதல் செய்ய வலியுறுத்தியும், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே விவசாயிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர். பாண்டியன் தலைமையில் நடைபெற்று வரும் இந்த போராட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். பாடை கட்டி, அதில் சடலம் போல் படுத்து, ஒப்பாரி வைத்து த.வெ.க. அரசுக்கு எதிராக நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாக்காளர் பட்டியல்:

சிறப்பு தீவிரத் திருத்தத்துக்கு எதிர்ப்பு!

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 1-

எஸ்.ஐ.ஆர். மூலம் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும், நீக்கும் திட்டத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதி உள்ளனர்.

தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர்., பணிகள் மூலம் தங்களுக்கு ஆதரவான வாக்காளர்களை அதிகளவில் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதும், அதேநேரத்தில் தங்களுக்கு எதிரான பெண்கள் மற்றும் சிறு பான்மையினர் உள்ளிட்ட வாக்காளர்களின் பெயர்களை நீக்குவதும் என தேர்தல் ஆணையம் மூலம் ஒன்றிய பா.ஜ.க., அரசு தில்லுமுல்லுகளை அரங்கேற்றி வருகிறது. இதற்கு நாடு முழுவதும் உள்ள அரசியல் கட்சிகள் தொடர்ந்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், திமுக, சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் SIR திட்டத்தின் மூலம் ஏற்படும் பாதிப்புகள் குறித்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூரிய காந்துக்கு கடிதம் எழுதி உள்ளனர். ஏற்கனவே பீகார் SIR வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், SIR அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் மீண்டும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதி உள்ளனர். இதனிடையே பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் டெல்லியில் SIR பணிகள் தொடங்கி உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் சென்ற நடிகர் ஜூனியர் பாலையா அவர்களின் புதல்வி நிவேதிதா – சுரேஷ் தம்பதியின் திருமண வரவேற்பு நேற்று (29.06.2026) வானகரத்தில் உள்ள தனியார் திருமண அரங்கில் நடைபெற்றது. தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் எம்.நாசர், துணைத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் இருவரும் கலந்து கொண்டு தி.மு.க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பிய திருமண வாழ்த்து செய்தியை வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் த.வெ.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடு எதிரொலி!

தொடர் மின்வெட்டால் கொதித்த பொதுமக்கள் – நள்ளிரவில் சாலை மறியல் போராட்டம்!

திருவள்ளூர், ஜூலை 1:

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே தொடர்ச்சியாக நீடித்து வரும் மின்வெட்டு, பொதுமக்களின் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு மோசமடைந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பலமுறை புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறி, ஆத்திரமடைந்த பொதுமக்கள் நள்ளிரவில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம், த.வெ.க. அரசின் நிர்வாகத் திறனின்மை மற்றும் மின்வாரியத்தின் செயல்பாடு குறித்து கடும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

பொன்னேரி அடுத்த கிருஷ்ணாபுரம் பகுதியில் கடந்த சில நாட்களாக பகல், இரவு பாராமல் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் பல மணி நேரம் மின்சாரம் இல்லாததால் குழந்தைகள், முதியோர், நோயாளிகள், மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்வோர் என அனைத்து தரப்பினரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 9 மணியளவில் ஏற்பட்ட மின்தடை, நள்ளிரவு 12 மணி வரை நீடித்ததாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொன்னேரி-செங்குன்றம் சாலையில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போராட்டத்தால் அந்தப் பகுதியில் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கூறுகையில், மின்வாரிய அதிகாரிகளை பலமுறை தொடர்பு கொண்டபோதும், பிரச்சினைக்கு தீர்வு கூறாமல், "மின்தடை தொடர்ந்து இருந்தால் உங்கள் வீட்டிற்கு இன்வெர்ட்டர் வாங்கிக் கொள்ளுங்கள்" என அலட்சியமாக பதிலளித்ததாக குற்றம்சாட்டினர். மக்களின் துயரத்தை உணராமல் அதிகாரிகள் செயல்படுவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

"இரவு முழுவதும் தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரும்மின்வெட்டால் கடுமையாக அவதிப்படுகின்றனர். பலமுறை புகார் அளித்தும் அரசும் அதிகாரிகளும் எங்களது பிரச்சினையை கண்டுகொள்ளவில்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியான மின்வெட்டு குறித்த புகார்கள் அதிகரித்து வரும் நிலையில், அத்தியாவசியமான மின்சார சேவையைக் கூட சீராக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் விமர்சித்து வருகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையை முடக்கிவரும் இந்தப் பிரச்சினைக்கு உடனடி மற்றும் நிரந்தரத் தீர்வு காணாமல் அரசு அலட்சியமாக செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டும் வலுத்து வருகிறது.

பொதுமக்களின் அடிப்படைத் தேவையான மின்சார விநியோகத்தைக் கூட உறுதி செய்ய முடியாத நிலை உருவாகியிருப்பது, த.வெ.க. அரசின் நிர்வாகத் திறனை கேள்விக்குறியாக்கியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கருத்துகள் எழுந்துள்ளன. தொடர்ச்சியான மின்வெட்டு, அதிகாரிகளின் அலட்சிய அணுகுமுறை, தீர்வு காணப்படாத புகார்கள் ஆகியவை இணைந்து, ஆட்சியின் செயல்பாடு மீதான மக்களின் அதிருப்தியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

ஜிம். க.பிரபு தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி – இரா.துரைராஜ் முன்னிலையில்

சைதை மேற்குப் பகுதி, விளையாட்டு மேம்பாட்டு அணி: கு.அஜித்குமார் திருமணம்!

மா.சுப்பிரமணியன் நடத்தி வைக்கிறார்! மு.மகேஷ்குமார் – ப.தாயகம்கவி – ச.அரவிந்த் ரமேஷ் – காரம்பாக்கம் க.கணபதி – ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா – தூத்துக்குடி எஸ்.ஜோயல் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 1

சைதை மேற்குப் பகுதி, விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் கு.அஜித்குமார் திருமணத்தை மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.

ஜிம்.க.பிரபு தலைமை! எம்.கிருஷ்ண மூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலை வகிக்கின்றனர். மு.மகேஷ்குமார், ப.தாயகம் கவி, ச.அரவிந்தரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, தூத்துக்குடி எஸ்.ஜோயல் பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் மணமகன் கு.அஜித்குமார், மணமகள் சிந்து (எ) பவித்ரா அவர்களின் திருமண வரவேற்பு விழா, மற்றும் திருமண விழா நடைபெற உள்ளது.

கழக தலைவர் முன்னாள் முதல்வர், தளபதி மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் நடைபெறும். இந்நிகழ்விற்கு சைதை மேற்கு பகுதியின் அமைப்பாளர் ஜிம் க.பிரபு தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ். ஹரிபாபு ஆகியோர் முன்னிலையிலும்,

வட்டகழக செயலாளர்கள் அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், தா.மோகன்குமார் எம்.சி., மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், மற்றும் முகப்பேர் நீலகண்டன் வெ.கிஷோர்குமார், எஸ். மோகன்குமார், கொடி கே.பாலா, ஆகியோர் வரவேற்பில் இன்று (01.07.2026 புதன்கிழமை) மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை, ரங்கபாஷ்யம் தெருவில் உள்ள, மோகனாம்பாள் திருமண மண்டபத்தில் வரவேற்பு நிகழ்வும், நாளை (02.07.2026 வியாழக்கிமை) காலை 7.30 மணியிலிருந்து 9.00 மணிக்குள் திருமண விழாவும் நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன், திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் இந்நிகழ்விற்கு பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ச.அரவிந்த ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கழக இளைஞர் அணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல்,

பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ. பாஸ்கரன், வட்ட கழக நிர்வாகிகள் ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, ஆ.வரதன், வே.முருகன்,

மாவட்ட பிரநிதிகள் கு.புகழ்வேந்தன், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜிபாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.எஸ்.பழனி, ஏ.சந்தோஷ், பி.நரேஷ்குமார், தீனதயாளன், புருஷோத்தம்மன், சம்மந்தம், ஆர்ட்ஸ் குமார், கார்த்திகேயன், ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், தமீம் அன்சாரி, மாவுமில் ஸ்ரீதர், எம்.மாறன், ச.தினகரன், கேபிள்காளி, எம்.ஜி.மதிவாணன், ரவீந்திரகுமார், துரைராஜ், சிற்றரசு, தமிழ்வேல் கவி,

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் விவேக்செல்வம், விக்னேஷ், ஆர்.எஸ்.ரமேஷ், கற்பகம், எல்.கார்த்திக், கோயில்மணி, ஜி.ஜே.மோசஸ், பி.டி.சி.குமார், ஆர்.தனசேகரன், எஸ்.மல்லிகா, சார்புசரவணன், வைரவமூர்த்தி, பூ.பாஸ்கர், ஜெயராமன், நிர்மல்குமார், 139, 139 (அ) வட்டகழக நிர்வாகிகள் மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், எஸ்.சாந்திசுந்தரம், அ.அயாத் பாஷா, அ.சுப்பிர மணி, து.துளசி, எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், வி.சபரி, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், ஜி.ஏழுமலை, கொடி சுரேஷ், டி.கோபாலகிருஷ்ணன், எஸ்.முகமதுஅலி, என்.ராஜேஷ்,

பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ம.சுகுமார், இரா.சத்யா, மு.அருண், க.தீபன், இரா.வெங்கடேசன், எஸ்.பரத்குமார் உள்ளிட்ட அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

நிகழ்வின் இறுதியாக வழக்கறிஞர் எம்.விஜய், ஏ.அஜய், தீ.உதயசூரியன், ச.பிரசாந்த் ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

கழக மாணவரணி சார்பில் தமிழக வெற்றி கழக அமைச்சர் சரத்குமார் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து ஒருங்கிணைந்த சென்னை. மாவட்ட மாணவர் அணி சார்பில் சென்னை , எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டு மைதானம் அருகில் நடைபெறவிருந்த ஆர்பாட்டம் முறையாக அனுமதி கேட்டபோதும் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ தலைமையில் மேயர் பிரியா ராஜன்.கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு வீரமணி, கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் நா. எழிலன், தமிழன் பிரசன்னா மற்றும் 2000க்கும் மேற்பட்டோர் புரசைவாக்கம் டவுட்டன் பகுதியில் ஊர்வலமாக சென்று சாலையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திருவிக நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட 234 மகளிர் நிர்வாகிகள் Cr.No.196/2026 u/s 189/2,292 BNS,41/6 TNCP Act என்ற சட்டப் பிரிவின் கீழ் கைது செய்து சென்னை கண்ணப்பர் திடலில் உள்ள சமூக நலக் கூடத்தில் தங்க வைக்கப்பட்டனர்.